# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

## மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 – (2023)

| தரம் - 08 | வரலாறு | நேரம்: 2.00 மணித்தியாலங்கள் |
|---|---|---|

பெயர் / சுட்டெண் ..............................................................................

### பகுதி-I

**01. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. பொலநறுவை காலத்தில் சந்திரவட்டக்கல்லிலிருந்து இந்து சமய செல்வாக்கு காரணமாக நீக்கப்பட்ட உருவம்?
   1. யானை 2. அன்னம் 3. எருது 4. சிங்கம்

2. இலங்கையில் முதன் முதலில் நந்தவனம் அமைத்த மன்னன்?
   1. மூத்தசிவன் 2. பண்டுகாபயன் 3. வலகம்பா 4. விஜயன்

3. மகாவம்சத்தில் 163 குளங்களை கட்டுவித்ததாக கூறப்படும் மன்னன்?
   1. விஜயபாகு 2. வலகம்பா 3. முதலாம் பராக்கிரமபாகு 4. நிஸ்ஸங்கமல்ல மன்னன்

4. “இந்நாட்டில் மழையினால் பெறும் ஒரு துளி நீரையேனும் மனிதருக்கு பயன் படாமல் கடலில் கலக்க விடமாட்டேன்” என்னும் மகுட வாசகத்துக்குரியவர்?
   1. வசபன் 2. மகாசேனன் 3. தாதுசேனன் 4. 1ம் பராக்கிரமபாகு

5. கலிங்கமாகனின் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து இராசரட்டை நாகரீகம் வீழ்ச்சியுற்ற ஆண்டு எது?
   1. கி.பி 1215 2. கி.பி 1200 3. கி.பி 1212 4.கி.பி1213

6. கண்டி இராச்சியத்தின் முதலாவது மன்னன்?
   1. ஜயவீர பண்டார 2. கரலியத்த பண்டார
   3. முதலாம் விமல தர்ம சூரியன் 4. சேனாசம்மத விக்கிரமபாகு

7. 1602ஆம் ஆண்டில் பலனப் போரில் போர்த்துக்கேயரைத் தோல்வி அடையச் செய்த மன்னன் யார்?
   1. செனரத் மன்னன் 2. முதலாம் விமல தர்ம சூரியன்
   3. கரலியத்த பண்டார 4. இரண்டாம் இராஜசிங்கன்

8. கண்டி காலத்தின் முதலாவது நாயக்க வம்ச மன்னன்?
   1. ஸ்ரீவிஜய இராஜசிங்க மன்னன் 2. கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன்
   3. இராஜாதிஇராஜசிங்கன் 4. இரண்டாம் இராஜசிங்க மன்னன்

9. இஸ்லாமியரான துருக்கியர் கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றிய ஆண்டு?
   1. கி.பி1453 2. கி.பி1450 3. கி.பி1451 4. கி.பி 1452

10. மத்திய கால இறுதியில் பிரான்ஸ்சில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகம் எது?
    1. ஒக்ஸ்போட் 2. கேம்பிரிஜ் 3. பாதுவா 4. பரிஸ்

11. புவி கோள வடிவமானது என்றும், புவியும் ஏனைய கோள்களும் சூரியனைச் சுற்றி வலம் வருகிறதென்றும் கண்டறிந்தவர்?
    1. நிக்கலஸ் கொப்பர்னிகஸ் 2. கலிலியோ கலிலி
    3. ஜொஹென்னஸ் கெப்லர் 4. மைக்கல் சர்டேஸ்

12. லியனாடோ டாவின்சியினால் வரையப்பட்ட சித்திரம்?
    1. மோனாலிசா 2. இறுதித்தீர்ப்பு
    3. சிஸ்டைன் தேவாலயத்தில் வரையப்பட்ட ஓவியம் 4. பியெட்டா சிலை


kalvi.lk

13. தாம் கிறிஸ்தவர்களையும் வாசனைத்திரவியங்களையும் தேடியே வந்ததாகக் கூறியவர்?
1. கடலோடி ஹென்றி 2. கிறிஸ்டோபர் கொலம்பஸ்
3. வாஸ்கொடகாமா 4. ஹென்றி ஹட்சன்

14. போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது கோட்டை இராசதானியின் அரசனாக இருந்த மன்னன் யார்?
1. ஏழாம் புவனேகபாகு 2. றைகம பண்டார
3. 6ம் விஜயபாகு 4. எட்டாம் வீர பராக்கிரமாபகு

15. விஜயபாகு கொலையின் பின்னர் கோட்டை இராச்சியம் எத்தனை பிரிவாக பிரிக்கப்பட்டது?
1. இரண்டு 2. மூன்று 3. நான்கு 4. ஐந்து

16. போர்த்துக்கேயரின் கைப்பொம்மையாக செயற்பட்ட கோட்டை ஆட்சியாளன்?
1. றைகம பண்டார 2. 7 ஆம் புவனேகபாகு 3.மாயாதுன்னை 4. தர்மபாலன்

17. கன்னொருவ போரின் போது போர்த்துக்கேயப் படையை நடாத்திச்சென்றவர்?
1.பேரோ லோபேஸ் த சூசா 2.தொன் ஜெரோணி மோத அச வேது
3.கொன்ஸ்தாந்தினுத சூசா 4.தியோகோத மேலோ

18. போர்த்துக்கேயரின் ஆட்சியில் கத்தோலிக்க சமயத்தை பரப்புவதற்கு இலங்கைக்கு முதலாவதாக வந்த மிசனரி?
1.டொமினிக்கன் சபை 2.அகஸ்தீன் சபை
3.இயேசு சபை 4.பிரான்சிஸ்கன் சபை

19. மனித உடலின் குருதிச் சுற்றோட்டம் பற்றிய தகவல்களைக் கண்டறிந்தவர்?
1.வெரசல்ஸ் 2.வில்லியம் ஹர்வி 3.கெப்லர் 4. மைக்கல் ஆஞ்சலோ

20. குளம் ஒன்றின் முக்கியமான பகுதியாகிய கலிங்கல் தொட்டியின் பயன்பாடு?
1.குளக்கட்டு நீரினால் அரிக்கப்படுவதை தடுப்பதற்கு
2.குளத்தின் நீரை வெளியேற்றுவதற்காக
3.மேலதிக நீரை வெளியேற்றுவதற்கு
4.வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்திகொள்வதற்கு

(1.5×20=30புள்ளிகள்)

## பகுதி-II

- **முதலாம் வினா கட்டாயமானது.**
- **முதலாம் வினா உட்பட ஆறு வினாக்களுக்கு விடை தருக.**

01. (அ) பின்வரும் இடங்களை இலங்கைப்புறவுருவப்படத்தில் குறித்துக் காட்டுக.
1.செங்ககடல 2. மட்டக்களப்பு 3. கோட்டை 4.திருகோணமலை 5.மல்வத்துஓயா
6. மாதோட்டம் (6×1 =6புள்ளிகள்)

(ஆ) பின்வரும் இடங்களை உலகப்புறவுருவப்படத்தில் குறித்துக் காட்டுக.
1.அவுஸ்ரேலியா 2. கொன்ஸ்தாந்திநோபிள் 3. சீனா 4.நன்னம்பிக்கை முனை 5. உரோம் 6.இந்தியா
(6×1 =6புள்ளிகள்)

(இ) 1.அருகிலுள்ள படம் குறிப்பது யாது?
2.இப் படத்தை வரைந்த சித்திரக் கலைஞர் யார்?
(2×2= 4புள்ளிகள்)



(ஈ) 1. இம் மன்னனுடைய பெயர் என்ன?

2. இவர் எந்த இராச்சிய மன்னனாவான்?

(2×2= 4 புள்ளிகள்)



02. (1) இலங்கையில் பெருங்குளங்களை கட்டிய மன்னர்கள் மூவரைக் குறிப்பிடுக? (3 புள்ளிகள்)
(2) பாரியகுளங்களை அமைத்தமையால் இலங்கையர் அடைந்த அனுகூலங்கள் மூன்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(3) குளம் ஒன்றின் முக்கிய பகுதிகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

03. (1) கண்டி இராச்சியத்தின் பொருளாதார முறைகள் மூன்று துறைகளில் காணப்பட்டது அவற்றைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(2) கண்டி இராச்சியத்தின் வர்த்தகத்தில் ஏற்றுமதி செய்த பொருட்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(3) கண்டி இராச்சிய ஓவியக்கலையில் காணப்பட்ட சிறப்பான பண்புகள் நான்கு தருக. (4 புள்ளிகள்)

04. (1) போர்த்துக்கேயரால் கண்டி இராச்சியத்தில் மேற்கொள்ளப்பட்ட போர்கள் மூன்று தருக? (3 புள்ளிகள்)
(2) முதலாம் விமல தர்ம சூரியன் பௌத்த சமயத்தின் வளர்ச்சிக்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(3) கண்டி இராச்சியத்தை ஆட்சி செய்த மன்னர்கள் நால்வரைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

05. (1) மறுமலர்ச்சி என்றால் என்ன? (3 புள்ளிகள்)
(2) மறுமலர்ச்சி ஏற்படுவதற்கான காரணங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(3) மத்திய கால இறுதியில் ஐரோப்பாவில் தோற்றம் பெற்ற பல்கலைக்கழகங்கள் நான்கைக் குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

06. (1) மறுமலர்ச்சி காலத்தில் தோன்றிய எழுத்தாளர்கள் மூவரைக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)
(2) மறுமலர்ச்சிக் கால கலைப்படைப்புக்களின் இயல்புகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(3) மறுமலர்ச்சிக் காலத்தில் மைக்கல் ஆஞ்சலோவினால் வரையப்பட்ட ஓவியங்கள் எவை? (4 புள்ளிகள்)


07 (1) நாடுகாண் பயணங்களுக்கு அனுசரணை வழங்கிய நாடுகள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(2) நாடுகாண் பயணத்துக்கான காரணங்கள் மூன்று தருக. (3 புள்ளிகள்)
(3) ஐரோப்பியர் ஆசியாவுக்கு வந்ததன் நோக்கங்கள் எவை? (4 புள்ளிகள்)

08. (1) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வரும்போது இலங்கையில் காணப்பட்ட மூன்று இராச்சியங்களும் எவை? (3 புள்ளிகள்)
(2) "பறங்கியர் கோட்டைக்குப் போனதுபோல்" என்ற கூற்றை விளக்குக. (3 புள்ளிகள்)
(3) கண்டி இராச்சியம் மீது போர்த்துக்கேயரால் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்கள் தோல்வியடைந்தமைக்கான காரணங்கள் நான்கு தருக. (4 புள்ளிகள்)



kalvi.lk

(அ)



(ஆ)





kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான
மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில
மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

*இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.*

*அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...*

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457